புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சேக்கிழார் காட்டும் திராவிட சிசு

*ச.ஜோஸ்பின் அருள் ஜோதி,*
*முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக் கல்லூரி,*
*காரைக்குடி*

*முனைவர் அ.பாரதி ராணி,*
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ் உயராய்வு மையம்,*
*அழகப்பா அரசு கலைக்கல்லூரி, காரைக்குடி*

*ஆய்வுச்சுருக்கம்*

*சங்க காலம், சங்கம் மருவிய காலத்தை அடுத்துள்ள காலம் பக்தி இலக்கியக் காலமாகும். இறைவனையும், இறையடியார்களையும் பாடிய காலக்கட்டமே பல்லவர்காலமாகும். இறைவன் மீது உண்மையான இறை பக்தியுடைய பக்தர்கள் உள்ளம் உருகி வழிபாடு செய்து பாடிய இசைப்பாடல்களே பக்தி பாடல்கள் என அழைக்கப்பட்டது. சமண, சைவ, வைணவ மதங்களுக்கிடையே பூசல்கள் ஏற்பட்ட காலக்கட்டத்தில் எழுந்த பெரியபுராணம் நூலில் திருஞான சம்பந்தரின் பக்தி நெறியை சேக்கிழார் உணர்ந்த விதம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.*

*சமண நூலான சிந்தாமணியின்பால் அநபாய சோழன் மனம் கொண்டிருந்தான். இவனிடம் அமைச்சராக இருந்தவர் உத்தமசோழப் பல்லவன் என்னும் பட்டம் பெற்ற அருள்மொழித் தேவர். இவருக்குச் சேக்கிழார் என்ற பெயரே இன்றளவும் நிலை பெற்றுள்ளது. சமணத்தின் பால் ஈடுபாடு கொண்ட மன்னனின் மனத்தை சைவத்தின் மீது திருப்பவே சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார் என்பர். திருத்தொண்டர் புராணமே பெரியபுராணம் என ஆகி நாளடைவில் பெரியபுராணம் என்று வழங்கப்பட்டு வருகிறது. சுந்தர் பாடிய 11 பாடல்கள் நம்பியாண்டர் நம்பி பாடிய 89 பாடல்கள் பெரியபுராணத்திற்கு முதல் நூலும் வழி நூலுமாகும். இப்பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் 1256 பாடல்கள் கொண்ட நீண்ட புராணமாகும்.இப்புராணத்தில் ஞானசம்பந்தரைச் சேக்கிழார் உணர்ந்த பக்தி நிலையைப் பதினொரு பாடல்கள் கொண்டு இக்கட்டுரை விளக்குகிறது.*

*சிவனடியே சிவஞானம்*

*திருஞானசம்பந்தர் சிவபிரான் திருவடியை அல்லாது வேறொரு பொருளைச் சிந்தியாது உணர்ந்த நிலையைச் சேக்கிழார்,*

*"சிவனடியை சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" (பெரிய. 1973)*

*என மொழிகின்றார். இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்ட தொகையில் 'நற்கொன்றையான் அடியலார் பேணா எம்பிரான் சம்பந்தன்' என்று உணர்ந்து சாற்றியதும் ஈண்டு நோக்கத்தக்கது. மற்றும் மாணிக்கவாசகரும் 'இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க' என்று உணர்ந்து அருளியமையும் ஒப்பு நோக்கத்தக்கது.*

*வினை நீக்கும் திருநீலகண்டம்*

*முன் செய்த வினையின் பயனாக இப்பிறவியில் துன்பம் அடைதல் என்பது அவ்வினைக்கு இவ்வினை என்று உரைத்தல் நூன்மரபு. இதனைப் பிரார்த்த வினை என்பர். இத்தகைய வினையாவும் நீக்கப் பெற வேண்டுமானால் கைகளால் செய்யும் செயல்களாகிய மலர் பறித்து ஏத்தல், கைகுவித்து வணங்குதல் போன்ற செயல்களைச் செய்ய இத்தகைய வினை*

*நீங்கும் என்பதை உணர்ந்த சேக்கிழார் சம்பந்தர் பாடிய 91 ஆம் திருப்பதிகத்தின் அடிகள் உணர்ந்து பெரிய புராணத்தில்,*

*"செய்வினை தீண்டா திருநீலகண்டம்" (பெரிய.2238:4)*

*எனப்பாடி பரவியிருப்பது காணத்தக்கது.*

*அந்தணர்கள் ஓதிய மறை*

*தந்துபி முதலான வாத்தியங்கள் முழங்கினாலும் அவை மேலேழுந்து பரவாத நிலையில் அந்தணர்களாகிய பெருமைமிகும் தவச் சீலர்கள் ஆயிரம் வேதங்களை முழங்கிப் பேரொளியை எழுப்பினார்கள். ஆங்கு எழுந்த மங்கல ஒலிகள் எல்லாத் திக்குகளிலும் முழங்கின. செந்தமிழ் போன்று இனிது விளங்கும் பொதிய மலையிலிருந்து வீசும் காற்று எல்லா இடங்களிலிருந்தும் பரவிச் சேவித்து வணங்குதலை ஒத்தன என்பதனை,*

*"தந்துபிகள் முதலாய தூரியங்கள் கிளராமே*
*அந்தணராம் மதவர்கள் ஆயிரம்மா மறை எடுப்ப*
*வந்து எழும் மங்கலநாதம் மாதிரம் உள்பட முழங்க*
*செந்தமிழ்மா மருதம் எதிர்கொண்டு எம்மருங்கும் சேவிப்பு" (பெரிய.2552:4)*

*என்பர். இவ்விடத்து ஞானசம்பந்தர் ஆயிரம் மாமறை ஏத்திய பாங்கினில் இரண்டாம் திருமுறை திருவாழ்கொளி புத்தூர்த் திருப்பதிகத்தில்,*

*"சாகை ஆயிரம் உடையார்*
*சாமமும் ஓதுவது உடையார்"*

*என்று அருளியது உணர்ந்து சேக்கிழார் பாடியிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.*

*திருநீற்று ஒளியில் விளங்கும் மேன்மை*

*மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் அன்றிச் சிவனடியார்கள் அரிதாயினும் சிவபிரான் திருவருள் வாய்க்கப் பெற்ற பாங்கில் மேவிய நலனும் அதன் செழும் பயனாய்த் திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டிற்கு எழுந்தருளப் பெற்றார். அதனால் அந்நாட்டிற்கும் வேந்தனுக்கும் வருங்காலத்தில் திருநீற்றைப் போற்றி அணிபவர்களாய் ஒளிமேவும் சைவ நன்னெறியில் விளங்குவதற்கும் மேன்மை அடைவதற்கும் சிறப்பாய் அமையும் என்பதை,*

*"வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மை" (பெரிய.2562:4)*

*எனும் அடிகள் உணர்த்தும். திருநீற்று ஒளியில் விளங்கும் மேன்மையை சேக்கிழார் ஞானசம்பந்தர் வழி உணர்ந்தது.*

*கூன் நிமிர்ந்து செங்கோலானது*

*திருஞானசம்பந்தர் அருளிய திருப்பாசுரத்தில் எம் தலைவரான சிவபிரானே எல்லாப் பொருளுமாகி விளங்குபவர் என்னும் கருத்துப்பட உரைத்தருளும் தன்மையில் வேந்தன் தன்னை ஓங்குமாறு பாடப் பாண்டிய மன்னனின் கூன், சோழ மன்னன் அனபாயனது ஆட்சியில் விளங்கும் செங்கோல் போன்று நிமிர்ந்தது என்பதை உணர்ந்த சேக்கிழார்,*

*"செம்பியன் செங்கோல் என்னத் தென்னன் கூன்*
*நிமிர்ந்தது அன்றோ" (பெரிய.2750:4)*

*என்பதால் அறியலாம்.*

*அடியார்க்கு அமுது எய்துவித்தல்*

*உலகில் பறிந்து பல செயல்களில் முனைந்தாலும் உறுதிப்பொருளாக மேவிப்பயன் தரக்கூடியது அடியவர்க்கு அமுது செய்வித்தலும், திருக்கோயில் திருவிழாக்களைக் கண்டு மகிழ்தலும் ஆகும் என்பது திருஞானசம்பந்தரால் அருளப்பெற்றது உணர்ந்து சேக்கிழார்,*

*"மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்*
*அண்ணலார் அடியார் தமை அமுது வெய்வித்தல் (பெரிய. 2990:1 - 2)*

*எனக் கூறுவதால் அறிய முடிகிறது. அடியவர்களுக்கு அமுது செய்வித்த நிலையில் இளையான் குடிமாற நாயனாரின் செல்வம் பெருகிய தன்மையை,*

*"ஆளும் நாயகர் அன்பர் ஆனவர்*
*அளவிலார் உளம் மகிழவே*
*நாளும் நாளும் நிறைந்து வந்து*

நுகர்ந்த தன்மையின் நன்மையால்
நீளும் மாநிதியின் பரப்பு நெருங்கு
செல்வம் நிலாவின் எண்
தோளினார் அள கைக்கு இருத்திய
தோழனார் என வாழும் நாள்'' (பெரிய.444)

என்று அருளியது ஒப்பு நோக்கத்தக்கது. மற்றும் இதுவே உறுதிப் பொருளாக விளக்கிப் பயன் தரும் என்னும் தன்மையை வள்ளுவரும்,

''அற்றார் அழபசி தீர்த்தல் அஃது ஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி''(குறள்.226)

எனக் கூறியிருப்பது காணத்தக்கது.

அன்பின் வழி மேவிய அன்பர்கள்

சைவம், பாசுபதம், மாவீரதம், காளாமுகம், வாமம், வைரம் என்னும் அறுவகையான சைவத்து விளங்கும் அளவில்லாத பேரன்பர்களும், சைவநெறி நின்று தவத்திரு கோலத்தில் உள்ளோரும் குற்றமில்லாத மனத்தினராய் அன்பின் வழி மேவி விளங்குபவர்களும் யோக நிலை மேவி ஒழுகுபவர்களுமாய் திகழ்பவர்களும் குழுவாகத் திருஞானசம்பந்தர் திருமணம் காண வந்தனர் என்பதை சேக்கிழார்,

''அறுவகை விளங்கும் சைவத்து
அளவிலா விரதம் சாரும்
நெறிவழி நின்று வேடம்
நீடிய தவத்தினுள்ளோர்
மறுஅறு மனத்தில் அன்பின்
வழியினால் வந்த யோகக்
குறிநிலை பெற்ற தொண்டர்
குழாம் குழாம் ஆகி ஏக'' (பெரிய.3106:3-4)

என்று உணர்த்துவதன் வழி ஞானசம்பந்தரை சேக்கிழார் உள்வாங்கியது அறிய முடிகிறது.

திருவெண்ணீறும் திருவைந்தெழுத்தும்

பெருமணம் எனும் திருக்கோவில் அடைய அழகுக்கெல்லாம் பேரழகாக விளங்கும் திருவெண்ணீற்றைத் திருவைந்தெழுத்து ஓதிச் சாத்தி மேவிய திருஞானசம்பந்தர் பழைய அடியார் சூழப் பேரொளி நிலவும் வீதியை அடைந்து இடப வாகனத்தின் மீது விளங்கும் சிவபிரானை நெஞ்சிற் கொண்டு வணங்கி வந்து முழவு ஒலிக்க முத்துப் பல்லக்கின் மீது ஏறி அமர்ந்ததை,

''அழகினுக்கு அணியாம் வெண்ணீறு
அஞ்செழுத்து ஓதிச் சாத்திப்
பழகிய அன்பர் சூழப்
படர்ஒளி மறுகில் எய்தி
மழவிடை மலோர் தம்மை
மனம்கொள வணங்கி வந்து
முழுவொலி எடுப்ப முத்தின்
சிவிகை மேற்கொண்டபோது'' (பெரிய.3120)

எனக் கூறுவதால் திருவெண்ணீறும் திருவைந்தெழுத்தும் குறித்து ஞானசம்பந்தர் தேவாரத்தில் கூறியதைக் கொண்டு சேக்கிழார் உணர்ந்ததை அறிய முடிகிறது.

வாழ ஏட்டினை வைகையில் இட்டவர்

திருஞானசம்பந்தர் வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் என்று தொடங்கும் திருப்பாசுரத்தை அருளிச் செய்து வைகை ஆற்றில் இட்டுப் புனல் வாதத்தில் வெற்றி கொண்டு சைவ சமயத்தை நிலைநிறுத்தியதால் அந்தணர் வாழ்தலும், வானவர் மற்றும் ஆனினம் வாழ்தலும், தண்புனல் பெருகுதலும், அரன்நாமம் சூழ்ந்து அன்பும் சைவமும் பெருகுதலும், வையகம் துயர்தீர்ந்து இனிது வாழ்தலும் ஆகிய செயல் எல்லாக்காலத்தும் நிகழ விளங்குதலைக்

கொண்டு அத்தகைய செயற்காரணமாகிய வைகையினுள் திருப்பாசுரம் எழுதப்பெற்ற ஓலை இட்ட தன்மையை உணர்ந்த சேக்கிழார்,

"எங்களை வாழ முன்னாள்
ஏடுவை கையினுள் இட்டம்" (பெரிய.3133:4)

எனப்பாடுவதும் ஞானசம்பந்தரை உணர்ந்த நிலையாகும்.

பிறவிப் பிணி தீர்க்க

திருஞானசம்பந்தர் எல்லோர்க்கும் மெய்ந்நெறியாகத் திகழ்வதும் ஞான விளங்கத்தக்கதும் நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தாம் சொல்லே என்று சாற்றும் நமச்சிவாயத் திருப்பதிகத்தை வானுலகமும் மண்ணுலகமும் கேட்குமாறு அருளிச்செய்து பேருபேதமாக்கி இம்மணத்தில் வந்தோர் அனைவரும் ஈனம் உடைய பிறவிப்பிணி தீர்க்கும் இச்சோதியுள் புகுக என்றார் என்பதை,

"ஞானமெய்ந் நெறிதான் யார்க்கும்
நமச்சிவாயச் சொல்லாம் என்று
ஆனசீர் நமச்சி வாயத் திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க
அருள்செய்து இம் மணத்தில் வந்தோர்
ஈனமாம் பிறவி தீர
யாவரும் புகுக" (பெரிய.3151)

என்னும் பாமாலை சுட்டும். இவ்விடத்து சேக்கிழார் ஞானசம்பந்தர் அருளிச்செய்த மூன்றாம் திருமுறையில் அமைந்த காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது நாதன் நாமம் நமச்சிவாயவே என்று தொடங்கும் திருப்பதிகத்தை உணர்ந்து எழுதியிருப்பது ஒப்பு நோக்கத்தக்கது.

முடிவுரை

நாயனார் அவதாரம், தீர்த்தக்கரையில் இருத்தல், பாலடிசில் பெறுதல், முதல் திருப்பதிகம் பாடுதல், தலயாத்திரைகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர் சந்திப்பு, முத்துச்சீவிகை பெறுதல், முப்புரிநூல் அணிவித்தல் ஆகிய இதுபோன்ற 44 நிகழ்வுகளைக் கட்டமைத்துச் சேக்கிழார் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்தை அமைத்திருப்பின் அதிலிருந்து சேக்கிழார் உணர்ந்த சில உணர்வுகள் மட்டும் இக்கட்டுரையில் காலம் கருதி சுட்டப்பட்டுள்ளது.

********* ********* ********** ********* ********* ********** ********** **********